## மோடி அரசு தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கிறது!

# பத்து தோல்வி பழனிசாமியை இந்தத் தேர்தலோடு மொத்தத் தோல்வி பழனிசாமியாக்கி வீட்டுக்கு அனுப்புவோம்!

### முதுகுளத்தூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!



**இராமநாதபுரம்,ஏப்.5-**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும் துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.4.2026) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டபோது ஆற்றிய உரை வருமாறு:**

இவ்வளவு சிறப்பான, எழுச்சியான, அன்பான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய அனைவருக்கும் முதலில் என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வருகிற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தமிழ்நாடு முழுவதும் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று, நம் தலைவர் தான் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமரப்போகிறார்.

தலைவர் அவர்கள் இந்த முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்களை வெற்றி வேட்பாளராக உங்களிடத்தில் மீண்டும் ஒப்படைத்திருக்கிறார். நான் உங்களிடம் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு கேட்கலாம் என்று வந்தேன். ஆனால் இங்கு உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது, நீங்களெல்லாம் ஏற்கனவே உதயசூரியனை வெற்றிப்பெற செய்ய முடிவு செய்து விட்டீர்கள் என்பது தெரிகிறது.

### வெற்றிச் சின்னம் உதய சூரியன்!

உதயசூரியன் சின்னத்தில் வரும் ஏப்ரல் 23-ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்று, வாக்குப்பெட்டியில் உதயசூரியன் சின்னம் அண்ணன் ராஜகண்ணப்பனின் பெயர் இருக்கும். அதில் அழுத்தி வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் அண்ணனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

நான் கடந்த ஐந்து நாட்களாக தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறேன். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியாகச் சென்று அங்கு இருக்கக்கூடிய நம் நிர்வாகிகள், கட்சியினரையெல்லாம் சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று வாக்குக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களும் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எந்தத் தைரியத்தில் மக்களைச் சந்தித்து வாக்குக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்?

கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது நாம் செய்திருக்கக்கூடிய சாதனைகள், அந்தத் தேர்தலில் நாம் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதி, அவற்றையெல்லாம் செய்து முடித்துவிட்டோம் என்கிற நம்பிக்கையில் மக்களைச் சந்திக்கப் போகிறோம்.

சில திட்டங்களை மட்டும் இங்கே உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த முறை சட்டமன்றத் தேர்தலின்போது நம் தலைவர் கொடுத்த முக்கியமான வாக்குறுதி - மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம், விடியல் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று தலைவர் சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பேற்று நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு விடியல் பயணத் திட்டம், கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம். இந்தத் திட்டத்தினால் இன்று ஒவ்வொரு மகளிரும் ஒவ்வொரு மாதமும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமித்திருக்கிறார்கள்.

### சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளோம்!

அது தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம்; தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டத்தையும் நிறைவேற்றியிருக்கிறோம். குழந்தைகள் அனைவரும் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும், காலையில் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் பசியோடு படிக்கக் கூடாது என்று 'முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்' கொண்டு வரப்பட்டது. பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள் என்றால் முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வி வழங்கப்பட்டிருக்கிறது.

கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளுக்கு தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்களின் மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை நம் அரசு வழங்கியிருக்கிறது. 13 லட்சம் மாணவ மாணவிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். 3 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கிறோம்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு நம் தலைவர் கல்லூரி மாணவ மாணவிகள் 10 லட்சம் பேருக்கு இலவச மடிக்கணினி திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஒரே மாதத்தில் கொடுத்து முடித்திருக்கிறோம்.

அ.தி.மு.க நம் மீது விமர்சனம் செய்கிறார்கள், பொய்க் குற்றச்சாட்டு - என்ன? அ.தி.மு.க அரசு கொண்டு வந்த திட்டம் மடிக்கணினி திட்டம் என்கிறார்கள். ஆம், அந்தத் திட்டத்தை அ.தி.மு.க அரசுதான் கொண்டு வந்தது. அ.தி.மு.க ஆட்சியில் இருந்தபோது பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு மட்டும்தான் மடிக்கணினி கொடுத்தார்கள். 2019-இல் அ.தி.மு.க அரசு இருக்கும்போதே அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

### 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கினோம்!

அதன்பிறகு நம் முதலமைச்சர் என்ன செய்தார்? பள்ளியில் பயிலும் குழந்தைகளை விடக் கல்லூரி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுத்தால் அவர்களுக்கு இன்னும் பயனுள்ளதாக இருக்கும், ஒரு இடத்துக்கு வேலைக்குச் செல்வதற்காக இருக்கட்டும், மேற்படிப்புப் படிக்க, ஒரு திட்டம் தயார் செய்யப் பயனுள்ளதாக இருக்கும் என்று இன்று 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினியை நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்.

'கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்'. சென்ற முறை சொன்ன வாக்குறுதி, கடந்த மூன்று வருடமாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் நம் தலைவர் உரிமைத் தொகையாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும், தேர்தல் வரைக்குமாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் முயற்சி செய்தார்கள்.

ஆனால் நம் தலைவர் என்ன செய்தார்? 'நான் 1,000 ரூபாய் கொடுக்கிறதை நீ நிறுத்துகிறாயா? நான் கொடுக்கிறேன் 5,000 ரூபாய்' என்று சொல்லி பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதத்துக்கு சேர்த்து 3,000, கோடை கால சிறப்பு நிதி 2,000 என்று மொத்தம் 5,000 ரூபாயை நம் தலைவர் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு, ஒரு கோடியே 31 லட்சம் குடும்பங்களுக்கு நம் தலைவர் ஒரே தவணையில் கொடுத்தார்.


## ஆதரிப்பீர்

# உதயசூரியன்!




### மோடி அரசு மீது மக்களுக்கு அவநம்பிக்கை!

நம் தலைவர் காலையில் 6:30 மணிக்குக் கொடுத்தார், ஆனால் மகளிர் காலை 9:00 மணிக்கெல்லாம் வங்கியில் இருந்து பணத்தை எடுத்துவிட்டார்கள். ஏன், என்ன காரணம்? ஏனென்றால் மோடி அரசு மினிமம் பேலன்ஸ் என்று சொல்லி அந்தப் பணத்தை எடுத்துவிடப் போகிறார்கள் என்று அந்த அளவுக்கு ஒன்றிய அரசு மேல், மோடி அரசு மேலே மக்களுக்கு இருக்கக்கூடிய நம்பிக்கை.

இப்போது மகளிர் உரிமைத் தொகை குறித்து நம் முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற உடனே திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் என்றும், கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ஆக உயர்த்தப்படும் என்றும் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். 'கலைஞர் கனவு இல்லத் திட்டம்' மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் இல்லங்கள் கட்டி, வீடில்லாதவர்களுக்கெல்லாம் வீடு வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு எந்தவிதப் பிணையும் இல்லாமல் 5 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும் என்றும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும் என்றும் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். இதெல்லாவற்றையும் விட மிகப்பெரிய ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அதுதான் ஆட்சி அமைந்த உடனே அனைத்து மகளிருக்கும் 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன் வழங்குகிறோம். நீங்கள் அதை உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள எந்தக் கடைக்கு வேண்டுமானாலும் எடுத்துச் சென்று, உங்கள் வீட்டிற்குத் தேவையான மின்சாதனப் பொருட்கள் - அது தொலைக்காட்சியாக இருக்கலாம், குளிர்சாதனப் பெட்டியாக இருக்கலாம், துணி துவைக்கும் இயந்திரமாக இருக்கலாம், குக்கர் அல்லது மிக்ஸியாக இருக்கலாம் - உங்கள் விருப்பப்படி நீங்களே முடிவு செய்துகொள்ளலாம்.

### நீண்ட நெடிய அனுபவம் கொண்டவர் ராஜகண்ணப்பன்!

இவையெல்லாம் நடைபெற வேண்டும் என்றால் வரும் சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை நீங்கள் நம் அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டும். எப்பொழுதுமே ராமநாதபுரம் கழகத்தின் கோட்டை. அதுமட்டுமல்ல, மத நல்லிணக்கத்துக்கு, எந்தவிதச் சாதி மத வேறுபாடும் பார்க்கக் கூடாது என்பதற்கு இன்று தமிழ்நாட்டிற்கே ஒரு முன்மாதிரியான மாவட்டம் நம் ராமநாதபுரம் மாவட்டம்.

2021-ஆம் சட்டமன்றத் தேர்தலின்போது இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய நான்கு தொகுதிகளிலும் 100 சதவிகித வெற்றி பெற்றது. இந்த வெற்றியை வழங்கியது ராமநாதபுரம் மாவட்டம். நாடாளுமன்றத் தேர்தலிலும் லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தீர்கள். இப்போது சட்டமன்றத் தேர்தலில் அதைவிடக் கூடுதல் வித்தியாசத்தில் அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்களை நீங்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இரண்டாவது முறையாக இங்கே முதுகுளத்தூர் தொகுதியின் சட்டமன்ற வேட்பாளராகத் தலைவர் அறிவித்திருக்கிறார். மக்கள் பணி, கழகப் பணி இரண்டிலும் இரண்டு முறை அமைச்சர், நான்கு முறை சட்டமன்ற உறுப்பினர் என நீண்ட நெடிய அனுபவம் உள்ளவர் அண்ணன் ராஜகண்ணப்பன். குறிப்பாக இந்தப் பகுதி மக்களுக்குப் பல்வேறு திட்டங்களை ஏற்கனவே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்.

முதுகுளத்தூர் உள்ளிட்ட ராமநாதபுரம் மாவட்ட மக்களுக்குப் பயன்தருகின்ற வகையில் சுமார் 2,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் புதிய பணிகள் முடியும் நிலையில் இருக்கிறது.

கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சுமார் 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுது நீக்கும் பணி இன்று நடைபெற்று வருகிறது. 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரகுநாத காவேரி சுமார் 41 கிலோ மீட்டருக்குத் தூர்வாரப்பட்டு மதகு மற்றும் தடுப்பணை அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது.

42 கோடி ரூபாய் செலவில் கமுதி சுற்றுச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதுகுளத்தூர் சுற்றுச்சாலை முதற்கட்ட பணிகள் முடிந்துவிட்டன.

ரோச் மாநகரில் 20 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டுள்ளது. ஏர்வாடியில் புதிய தூண்டில் வளைவு அமைக்க 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நரிப்பையூரில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பனைப் பூங்கா அமைக்கின்ற பணிகள், பசும்பொன் கிராமத்தில் தெய்வீகத் திருமகனார் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் ஒரு அரங்கம், 124 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தேரிருவேலியில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின்நிலையம், ஏர்வாடியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அனைத்து விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

33 ஊராட்சிகளைக் கொண்ட சாயல்குடி புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் செய்து முடித்திருக்கக்கூடிய பணிகள்.

வரும்போதே கோரிக்கையும் வைத்தார், என் கையில் கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்.

கன்னிகாபுரி கிராமத்தில் ஒரு கிலோமீட்டர் தூரத்துக்குச் சாலை அமைத்துத் தர வேண்டும். டி.வி.எஸ் புரத்திலிருந்து கந்தசாமிபுரம் வரைக்கும் தார் சாலை அமைக்க வேண்டும்.

விளாத்திக்குளம் பிரிவிலிருந்து குமாரபாளையம் வரைக்கும் தார் சாலை. ஆரோக்கியபுரம் செல்லும் சாலையைச் சீரமைத்துத் தர வேண்டும். இளஞ்செம்பூர் கம்மாய் இரண்டு புறமும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும்.

நகரத்தார்குறிச்சியில் புதிய ரேஷன் கடையை அமைக்க வேண்டும். பம்மனேந்தல் கல்லாற்று நிலையில் சிறு ஆற்றுப்பாலம் அமைக்க வேண்டும். தேரிருவேலி ஊராட்சி மற்றும் முஸ்லிம் தெருவில் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டும். அபிராமத்திலிருந்து நகரத்தார்குறிச்சிக்குப் புதிய பேருந்து வழித்தடம் வேண்டும்.

### அண்ணன் ராஜகண்ணப்பன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்!

இப்படிப் பல்வேறு கோரிக்கைகளை அண்ணன் ராஜகண்ணப்பன் வைத்திருக்கிறார். நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுங்கள். வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க-வின் வெற்றி, உதயசூரியன் வெற்றி உறுதி செய்யப்பட்டதா? இந்த முதுகுளத்தூர் சட்டமன்றத்தில் அண்ணன் ராஜகண்ணப்பனின் வெற்றி உறுதி செய்யப்பட்டதா? நிச்சயமாக நீங்கள் இந்த வாக்குறுதியைச் சரி செய்தீர்கள் என்றால், நீங்கள் உங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றினீர்கள் என்றால் நான் உங்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன். நீங்கள் வைத்திருக்கக்கூடிய அனைத்து கோரிக்கைகளையும் அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்கள் வெற்றி பெற்றவுடனே சட்டமன்றத்துக்கு சென்று முதலமைச்சரிடம் சொல்லி நிச்சயம் அந்த வாக்குறுதிகளை நாங்கள் செய்து கொடுப்போம்.

இவ்வளவு திட்டங்கள் இந்தத் தொகுதிக்குச் செய்து இருக்கிறோம். தமிழ்நாட்டுக்கு இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம். வெற்றி பெற்றால் இவ்வளவு செய்வோம் என்பதை இங்கே சொல்லி இருக்கிறேன். இந்த ஐந்து வருடம் திமுக என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்தது என்று சொல்லி இருக்கிறேன். இவ்வளவு திட்டங்கள் கொண்டு வந்ததால்தான் இன்றைக்குத் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மையான மாநிலம். வளர்கின்ற மாநிலங்களில் 11.19% வளர்ச்சியோடு இன்றைக்கு தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. நாம் இவ்வளவு சாதனைகள் செய்து இருக்கிறோம்.

ஆனால் இதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு நம் தமிழ்நாட்டுக்கு ஏதாவது துணையாக நிற்கிறதா? நாம் கேட்கிற நிதியைக் கொடுக்கிறார்களா? எதுவுமே கொடுக்கவில்லை. கல்வி நிதி 2,500 கோடி கொடுக்கவில்லை. எந்த நிதியும் கொடுக்கிறது இல்லை, எந்தத் திட்டமும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குக் கொடுக்கிறது இல்லை. வரவு பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டமும் இல்லை. வரவு பட்ஜெட்டில் தமிழ்நாடு என்கிற பெயரே இல்லை. அப்படிப்பட்ட பா.ஜ.க-வைத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று இன்றைக்கு அ.தி.மு.க என்கிற போர்வையைப் போர்த்திக் கொண்டு மீண்டும் தமிழ்நாட்டுக்குள் வரப் பார்க்கிறார்கள்.

அதனால்தான் நம்முடைய முதலமைச்சர் தலைவர் தொடர்ந்து சொல்கிறார், இந்தச் சட்டமன்றத் தேர்தல் 'தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா?' அப்படிங்கிற தேர்தல். இதில் டெல்லி அணியை வீழ்த்தித் தமிழ்நாடு அணி நாம் வெற்றிபெற்று காட்ட வேண்டும். பத்து தோல்வி பழனிச்சாமியை இந்தத் தேர்தலோடு மொத்த தோல்வி பழனிச்சாமியாக்கி வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

### வெருவாரியன வாக்கு வித்தியாசத்தில் வெற்றி தாரீர்!

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகப் பூரிப்பாக சொல்ல வேண்டும் என்றால் கலைஞரின் பேரனாக இருந்து, தலைவரின் மகனாக இருந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்களை மிகப்பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்களின் முதுகுளத்தூர் தொகுதிக்கு தேவையான எல்லாத் திட்டங்களையும் அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்கள் கொண்டு வருவார். உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி.

ஆதரிப்பீர் உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன்!

இவ்வாறு துணை முதல்வர் - இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி, விவசாய அணி துணைச் செயலாளர் முருகவேல், செயற்குழு உறுப்பினர் லட்சுமி முத்துராமலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் அருள்பால்ராஜ், முருகன், தனிக்கோடி, இலக்கிய அணி துணைச் செயலாளர் பெருநாழி போஸ், வர்த்தகர் அணி துணைச் செயலாளர் ராமர், தொகுதிப் பார்வையாளர் வேல்முருகன், ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் ஷாஜஹான், பூபதிமணி, கோவிந்தராஜ், சண்முகம், ஹரி முத்துராமலிங்கம், வாசுதேவன், சண்முகநாதன், மனோகரன், ஜெயபாலன், குலாம் மொகிதீன், ஆறுமுகவேல், மாயகிருஷ்ணன், பாலமுருகன், வெங்கடேஷ், இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத்ராஜா, துணை அமைப்பாளர்கள் சத்தியேந்திரன், தௌஃபிக் ரஹ்மான், இளைஞரணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, எஸ்.டி.பி.ஐ, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், மனிதநேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழ்ப் புலிகள் கட்சி, முக்குலத்தோர் புலிப் படை, சமத்துவ மக்கள் கழகம், ஆதித்தமிழர் கட்சி, தமிழர் தேசம் கட்சி, புலித்தேவர் மக்கள் முன்னேற்றக் உள்ளிட்ட அனைத்துத் தோழமைக் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.